DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

CC- 74/2019

Prosecution witness – PW.13

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.கருப்பன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused absent. Petition u/s.317 Cr.P.C. filed through E-filing and allowed)

21.08.2024 – 06.00 PM

<u>முதல் விசாரணை</u>

1. நான் உழக்குடி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1யை தெரியும் தாசில்தார். அவர்தான் எங்களை காப்பாற்றி சென்றார். எதிரி மூர்த்தியை தெரியும்.

2. கடந்த 2012ம் ஆண்டு மூர்த்தி என்பவரது சேம்பருக்கு வேலைக்கு சென்றோம். என்னுடன் எனது மனைவியும், மகனும் வந்தார்கள்.

3. எங்களுடன் சாலைமறைக்குளத்தைச் சேர்ந்த 10 குடும்பங்கள் வேலைக்கு வந்தார்கள். நாங்கள் செங்கல் அறுக்கும் வேலை செய்து வந்தோம்.

4. நான் வேலைக்கு செல்லும்போது முன்பணமாக ரூ.40,000/- வாங்கியிருந்தேன்.

5. எங்களுக்கு வாரத்தில் ரூ.500 முதல் 700/- வரை சம்பளமாக தருவார்கள். எங்களுக்கு கல் அறுக்கும் அளவிற்கு சம்பளம் வழங்குவார்கள். ஒரு நாளைக்கு ரூ.2,000/- வேலை செய்தால் முன் பணம் பெற்றதற்கு ரூ.1,500/- வீதம் எடுத்துக்கொண்டு ரூ.500/- மட்டும் தருவார்கள்.

6. மாதம் ஒருமுறை குடும்பத்தில் ஒருவர் மட்டும் ஊருக்கு சென்று ரேசன் அரிசி வாங்கிக்கொண்டு சேம்பருக்கு வருவோம். அதை கொண்டு சமைத்துக் கொள்வோம். தங்குவதற்கு சேம்பருக்குள்ளே வீடுகள் கொடுத்தார்கள்.

7. ஊரில் நல்லது கெட்டது நடந்தால் ஒருவர் மட்டும் செல்ல வேண்டும். எங்களுக்கு கஷ்டமாக இருந்தது. எங்களுக்கு வேறு வேலை எதுவும்

இல்லாததால் கஷ்டத்தை ஏற்றுக்கொண்டு ஊருக்கு செல்லவில்லை.

8. எங்களுடன் வேலை பார்த்த கார்த்தி என்பவரை முதலாளி மூர்த்தி என்பவர் அடித்துவிட்டார். அதனால் அவர் ஊசி போடுவதற்காக ஊருக்கு சென்று தாசில்தாருக்கு தகவல் சொல்லி அதிகாரிகள் வந்து எங்களை அழைத்துச் சென்றார்கள்.

9. எங்களை ஒரு வாகனத்தில் ஏற்றி அபிராமம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள்.

10. பின்னர் திருச்சுழிக்கு அழைத்துச் சென்றார்கள். பின்னர் எங்களை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

இல்லை.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.